In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No.11/2021 Prosecution witness P.W.16
Name: Rajapandi Calling:
Father Name: Religion:
Village: Caste:
Taluk: Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 09.10.2023
**(Accused is present.)**
முதல் விசாரணை :-

நான் தற்போது முத்துலாபுரத்தில் வசிக்கிறேன். கல்லூரியில் படித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 17.05.2020 ம் தேதி சுமார் 2.30 மணியிலிருந்து 3 மணியளவில் நான் விளையாட்டு மைதானத்தில் கிரிக்கெட் விளையாடிக்கொண்டிருந்தேன். அப்போது அலெக்ஸ் போன் செய்து அரசு மருத்துவமனை வரச்சொன்னார். நான் அரசு மருத்துவமனை சென்றேன். அங்கு ஊரில் உள்ள நிறைய பேர்கள் இருந்தார்கள். அவர்களிடம் என்ன என்று கேட்டேன். சங்கிலிக்கும் கிருஷ்ணமூர்த்திக்கும் சண்டை ஏற்பட்டதாகவும், அதில் கிருஷ்ணமூர்த்தி இறந்துவிட்டதாகச் சொன்னார்கள். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாகக் கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதிக்கப்பட்டது)

குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)

போலீசார் என்னை விசாரித்தபோது, கடந்த 17.05.2020 ம் தேதி மதியம் சுமார் 2.45 மணியளவில் நானும் என் அண்ணன் முத்துப்பாண்டியும் கூலி வேலைக்கு சென்றுவிட்டு சங்கிலி வீட்டு முன்பாக வரும்போது மதியம் 2.45 மணியளவில் அழகர்சாமி, அவரது தம்பிகள் கிருஷ்ணமூர்த்தி, அலெக்ஸ்,

கற்பகம் ஆகியோர்கள் கிருஷ்ணமூர்த்தி சங்கிலியிடம் எதுக்குடா தேவையில்லாமல் என் தாயரை அசிங்கமாக பேசி என் அண்ணனை கொன்றுவிடுவதாக மிரட்டின என்று கேட்டபோது அக்கம்பக்கம் இருந்தவர்கள் சத்தம் கேட்டு கூடிவிட்டனர் என்றும், அங்கு நின்றிருந்தி நானும், எங்கள் ஊரைச்சேர்ந்த பிரகாஷ், முத்துப்பாண்டி, தமிழரசி, பூபதி, விஜயலட்சுமி அனைவரும் வரவே, சங்கிலி அப்படித்தான்டா பேசுவேன் என்னடா பண்ணுவீங்க என்று சொல்லிக்கொண்டே வீட்டிற்குள் சென்று கத்தியை எடுத்து வந்து கிருஷ்ணமூர்த்தியின் இடது மார்புக்கு கீழ் பகுதியில் புண்ட மகனே சாவுடா என்று கூறிக்கொண்டே குத்தினார் என்றும் அதனால் கிருஷ்ணமூர்த்திக்கு அதிக இரத்தம் வெளியேறி சங்கிலி வீட்டு முன்பு விழுந்துவிட்டார் என்றும், கிருஷ்ணமூர்த்தியின் மனைவி, அழகர்சாமி, அலெக்ஸ் ஆகியோர்கள் தூக்க சென்றபோது கிருஷ்ணமூர்த்தி அவரே எழுந்து தடுமாறி சிறுது தூரம் தள்ளி மீண்டும் கீழே விழுந்ததால் அந்த இடம் முழுவதும் இரத்தமாகிவிட்டது என்றும் அதைப் பார்த்த அனைவரும் சத்தம் போடவும் தானும் விஜயகுமாரும் அங்கு சென்றதாகவும் அப்போது சங்கிலி கத்தியுடன் வீட்டிற்குள் ஓடியதால் நாங்கள் அவரை பிடிக்க சென்றபோது வீட்டிற்குள் இருந்து தப்பி வெளியே ஓடிவிட்டார் என்றும், பின்பு அருகில் இருந்த கருப்பு மகன் வினோத்தும், கிருஷ்ணமூர்த்தி தம்பி அலெக்சும் காயம்பட்ட கிருஷ்ணமூர்த்தியை இருசக்கர வாகனத்தில் ஏற்றிக்கொண்டு வத்தலக்குண்டு அரசு மருத்துவனைக்கு கொண்டு போய் சிகிச்சைக்கு சேர்த்தபோது அவரை பரிசோதனை செய்த மருத்துவர் கிருஷ்ணமூர்த்தி வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக கூறினார் என்றும், பின்னர் அவரை சவக்கிடங்கிற்கு அனுப்பி வைத்தார் என்றும், கிருஷ்ணமூர்த்தியின் மனைவி கற்பகமும் கிருஷ்ணமூர்த்தியின் தகப்பனார் ராமரும் பட்டிவீரன்பட்டி காவல்

நிலையம் சென்று நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தார் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தற்போது எதிரியை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய்சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை

A MUTHUSARATHA Digitally signed by A MUTHUSARATHA Date: 2023.10.09 17:21:04 +0530

Principal District Judge,
Dindigul.